

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி அமைப்பாளர் என். அப்துல்மாலிக் ஏற்பாட்டில் கோடை வெயிலின் தாகத்தை தணிக்க தண்ணீர் பந்தல் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார். உடன் ஐட்ரீம்ஸ் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் போக்குவரத்து மாற்றம்!

சென்னை,ஏப்.19

ஜி.கே.எம் பாலம் செனடாப் சாலையில் இருந்து வரும் வாகனங்களுக்கு மட்டும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படும்.

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு கிறார்கள்.

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான GST சாலையில் மேம்பால பணிகள் நடைபெற்று வருவதால் வரும் 20ம் தேதி முதல் 22ம் தேதி வரை போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான ஜி.எஸ்.டி சாலையில் நான்கு வழி மேம்பால சாலை அமைத்தல் தொடர்பாக செய்யப்பட்டுள்ள போக்குவரத்து மாற்றம்

ஜி.எஸ்டி சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான நான்கு வழிசாலைக்கான மேம்பால கட்டுமான பணிகள் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படுவதால், மேற்படி பணி நடைபெறும் 2004 2025 முதல் 2204.2025 வரை மூன்று நாட்களுக்கு சோதனை அடிப்படையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படும்.



இராயபுரம் மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் நிகழ்ச்சி ராயபுரம் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் அ.சாந்தகுமார் ஏற்பாட்டில் 53வது அ வட்டத்தில் நடந்த விழாவில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஐட்ரீம்.இரா.மூர்த்தி எம்.எல்.ஏ ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆகியோர் நேரில் பங்கேற்று பொதுமக்களுக்கு நீர் மோர் பழங்களை வழங்கினர். இந் நிகழ்வில் வ.பெ.சுரேஷ், லயோலா கே.மதன், கட்பீஸ் பி.சோமசுந்தரமூர்த்தி, இரா. பாலன், எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ. கௌரிஸ்வரன், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவை – திருப்பூர் விசைத்தறியினர் பிரச்சினைக்கு

# நல்ல தீர்வுகான அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்!

### பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பில் அமைச்சர்கள் விளக்கம்!

**சென்னை, ஏப். 19- விசைத்தறியினர் போராட்டத்திற்கு உரிய முறையில் நல்ல தீர்வு கான அரசு எல்லாவித மான நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்கும் என்று பேரவையில் அமைச்சர்கள் உறுதி அளித்தனர்.**

சட்டப்பேரவையில் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் நெசவுக் கூலி உயர்வு கேட்டு விசைத் தறியினர் போராட்டம் நடத்துவது குறித்து சிறப்பு கவன ஈர்ப்பில் எடப்பாடி பழனிச்சாமி, வேல் முருகன், ஈ.ஆர்.ஈஸ்வரன், மா.சின்னதுரை, வானதி சீனிவாசன், ஜே.ஜி.பிரின்ஸ், ஜி.கே.மணி, ட்டி.இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

இந்த கவன சிறப்பு கவன ஈர்ப்பில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், ஆர்.காந்தி, தங்கம் தென்னரசு, வி.செந்தில் பாலாஜி ஆகியோர் அளித்த விளக்க பதில்கள் வருமாறு:-

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** உறுப்பினர் அவர்கள், விசைத்தறியாளர்கள் போராட்டம் குறித்து அரசு கண்டுகொள்ளவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் ஜவுளி உற்பத்தியாளர்களை அழைத்து ஒருமுறை பேசியிருக்கிறேன். ஜவுளி துறையை எடுத்து, விசைத்தறியில் நெய்திற விசைத்தறி உரிமையாளர்களையும் அழைத்துப் பேசியிருக்கிறேன். 2 மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்கள். விரைவில் நல்ல தீர்வு கிடைக்கக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அமைச்சர் ஆர். காந்தி:** கோவை, திருப்பூர் மாவட்டங்களில் தனியார் விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் 19-3-2025-லிருந்து நடந்து கொண்டிருக்கிறது. இங்கே பேசிய உறுப்பினர்கள் இந்த அரசு இதில் அக்கறை கொண்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் அவர் மட்டுமல்ல, அதற்கு முன்பு கலைஞர், அண்ணா எப்படி நெசவாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்களோ, அதேபோன்று நெசவாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். ஆனால், இந்தப் போராட்டம் வரப் போகிறது என்று நினைத்து முதலமைச்சர் அவர்கள்– அதற்கு முன்பாகவே, என்ன நடந்தது என்று தெரியாமல் நீங்கள் அனைவரும் பேசிவிட்டீர்கள். அதற்கு முன்பாகவே, அதிகாரிகளுக்கு ஆணையிட்டு 27-2-2025, -19-3-2025 அன்று ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 27-2-2025 அன்றைக்கே மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளிடம் பேசியிருக்கிறார். அதற்கடுத்தது,

13-3-2025 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், தொழிலாளர் நலத் துறை மற்றும் கைத்தறித் துறை அதிகாரிகளிடம் பேசியிருக்கிறார்கள். அதேபோன்று 24 ஆம் தேதி அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், தொழிலாளர் நலத் துறை மற்றும் கைத்தறித் துறை அதிகாரிகளிடம் பேசியிருக்கிறார்கள். அதன்பிறகு 1-4-2025 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாநகர மேயர், தொழிலாளர் நலத் துறை மற்றும் கைத்தறித் துறை அதிகாரிகளிடம் பேசியிருக்கிறார்கள். இதற்குப் பிறகு, .

இதற்குப் பிறகு 11-4-2025 அன்று மாலை 7 மணிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜவுளி உற்பத்தியாளர் சமரசக் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என். கயல் விழி செல்வராஜ் அவர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா. கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகர மேயர் என். தினேஷ்குமார், தொழிலாளர் நலத் துறை ஆணையர், கைத்தறித் துறை உதவி இயக்குநர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அந்தப் பேச்சுவார்த்தையில் 2022 ஆம் ஆண்டு போட்ட கூலி உயர்வு குறித்த தீர்மானத்தை அவர்கள் அப்போது ஒப்புக் கொண்டார்கள். 2022 ஆம் ஆண்டு வரை அந்தக் கூலியைப் பெறுவதற்கு நெசவாளர்கள் அப்போது ஒப்புக் கொண்டார்கள். அதற்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல 5 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். அதற்குப் பிறகு, திருப்பூர் மாவட்டத்தில் விசைத்தறி நெசவாளர்கள் போராட்டத்திற்கு கடையடைப்பு எல்லாம் செய்தார்கள். அதற்குப் பிறகு 15 நாட்களுக்குப் பிறகு, பிற்பகல் 3.00 மணியளவில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் அவர்கள் 28 சதவிகித கூலி உயர்வு கேட்டார்கள். இதற்கிடையில், அவர்கள் 5 சதவிகித உயர்வுக்கு தனியார் ஒப்புக் கொண்டார்கள். விசைத்தறி நெசவாளர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் திரும்பவும் பேசிவிட்டு மீண்டும் வருகிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

முதன்முதலாக 2006-ல்தான் முதல்வர் கலைஞர் அவர்கள் இலவச மின்சாரத்தை அவர்களுக்கு வழங்கினார். அதற்குப் பிறகு, இப்போது திராவிட மாடல் ஆட்சி வந்தவுடன், 750 யூனிட்டிலிருந்து 1000 யூனிட்டாக உயர்த்தியவர் முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களுக்காக என்ன செய்தார் என்று சொல்வதற்காக இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதேபோல, இந்த 4 ஆண்டுக் காலத்தில் அதற்கு எவ்வளவு நிதி ஆகியுள்ளது என்றால், இதற்கு மட்டும் ரூ.1,831 கோடி விதிக்கப்பட்டுள்ளது. EB-க்கு மட்டும். அதேபோன்று, விசைத்தறிகளில், electronic panel board வழங்கியதும் நமது ஆட்சிக்காலத்தில்தான். ரூ.12 கோடி மதிப்பில், 50 சதவிகிதம் மானியம், ரூ.6 கோடி வழங்கப் பட்டது.

விசைத்தறிகளை நவீனப்படுத்த மானியம் வழங்கியது. கழக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விசைத்தறிகளை நவீனப்படுத்துவதற்கு மானியம் வழங்கியது. Powerlooms, Warping and Sizing machine கொள்முதல் செய்தது. . .

இந்த budget-ல் இதுவரையில் இல்லாத அளவிற்கு விசைத்தறிகளை நவீனப்படுத்துவதற்காக ரூ.50 கோடி ஒதுக்கித் தந்தது நமது முதலமைச்சர் அவர்கள்களின் இந்த ஆட்சிதான், தளபதி அவர்களின் ஆட்சிதான். அதனால், திரும்பவும் இப்போது பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

உங்களைவிட–, இதில் பின்னணியில் நிறைய ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் நடக்காது. தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, எதை எடுத்தாலும் வெற்றி. இவர்களுக்கு நல்ல முறையில் நிச்சயமாக நல்லது நடக்கும், நிச்சயமாக நம்புங்கள், பேச்சு வார்த்தை நடக்கும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** விசைத்தறி உரிமையாளர்கள் நடத்தக்கூடிய போராட்டத்தினுடைய தீவிரம் குறித்து அரசின் கவனத்திற்கு மிகுந்த அக்கறையோடு எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலைமையின் தீவிரத்தை அரசும் முழுமையாக உணர்ந்திருக்கிறது. அரசின் சார்பில் அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் தொடர்ந்து அந்தப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலும் உங்களுடைய கவலைகள் இன்றைக்கு எதிரொலித்திருக்கின்றன. முதலமைச்சர் அவர்களும் மிகுந்த அக்கறையோடு அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் கவனம் கொண்டிருக்கிறார்கள். அதில் இரு தரப்பினரும் பேச்சு வார்த்தைகள் நடந்து, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, அவர்கள் கேட்கக்கூடியது என்ன, என்ன கொடுக்க முடியும் என்பதைப் பார்த்திருக்கிறார்கள். 2022 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தின்மூலம் அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

எனவே, அரசு இந்த விஷயத்தில் முழு கவனத்தோடு இருக்கிறது. இந்த மன்றத்தில் உங்களுக்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், அரசு உங்களுடைய கருத்துக்களை உள்வாங்கியிருக்கிறது. நிச்சயமாக, மிக விரைவில் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும். இதில் மற்ற பல விஷயங்களெல்லாம் இருக்கின்றன. இதில் duty drawback இல்லாமல் இருக்கிறது. Duty drawback-ஐ நிறுத்தியதால் இதனுடைய- வந்திருக்கிறது. இலங்கை போன்று இருக்கக்கூடிய நாடுகளுக் கெல்லாம் இந்த duty drawback-ஐ மற்ற நாடுகள் இன்றைக்கு அதைக் கொடுக்கக்கூடிய காரணத்தால் அது முடிந்திருக்கிறது. இந்தியாவிலே அது இல்லை. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்- இதில் பல technical issues இருக்கின்றன. அதற்குள் நான் போக விரும்பவில்லை. . .

இருந்ததுதான். இப்போது ஏற்கெனவே இருந்தது நிறுத்தப் பட்டதனால், இப்போதைய இந்த சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எது எப்படியாக இருந்தாலும், மாமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கக்கூடிய முழு கருத்துகளினுடைய அடிப்படையில், மிக விரைவாக உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண்பதற்கு அரசு எல்லா வகையிலும் நடவடிக்கை எடுக்கும்.

**அமைச்சர் வி.செந்தில்பாலாஜி:** இந்த விசைத்தறி தொழிலாளர் களுடைய வேலை நிறுத்தம் குறித்து இங்கு பேசப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இதிலே மின்கட்டணம் குறித்து பேசப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு தேர்தல் வாக்குறுதியில் கொடுக்கப்பட்டிருந்தபடி 750 unit-லிருந்து 1,000 unit வரை விசைத்தறியாள ர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிப்பு செயல்படுத்தப்பட்டு கரும்பத்தம்பட்டியில் விசைத்தறி தொழிலாளர்கள், உரிமையாளர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து முதலமைச்சர் அவர்களுக்கு மிக பிரம்மாண்டமாக ஒரு பாராட்டு விழாவையும் நன்றி அறிவிப்புக் கூட்டத்தையும் நடத்தினார்கள்.

குறிப்பாக, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விசைத்தறி நெசவாளர்களுடைய மின் இணைப்பு எண்ணிக்கை 1 இலட்சத்து 63 ஆயிரம். ஏறத்தாழ அதிலே 1 இலட்சத்து 27 ஆயிரம் விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணமே இல்லை. 1,000 unit-க்குள்ளேதான் 1 இலட்சத்து 27 ஆயிரம் பேர் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள். அவர்களுக்கு எந்தவிதக் கட்டணமும் இல்லை. zero கட்டணம் மீதம் இருக்கக்கூடிய ஒரு 36,000 விசைத்தறி மின் இணைப்பு பெட்டகர்களுக்கு மட்டுமே கூடுதலாக 1,000 unit-க்கு மேலே பயன்படுத்தக்கூடியவர்களுக்கு கூடுதலாகக் கட்டணம் செலுத்தி வருகின்றார்கள்.

அந்த வகையில் இந்த விசைத்தறி நெசவாளர்களுக்கு மட்டும் தமிழ்நாடு அரசு முதலமைச்சர் அவர்கள் ரூ.571 கோடி அரசு மானியமாக நிதியை வழங்கி வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, அமைச்சர் பெருமக்கள் சுட்டிக்காட்டியதைப்போல, கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களும், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். இரண்டொரு தினங்களில் விரைவாக இந்தப் போராட்டத்திற்கு முடிவுகள் எட்டப்பட்டு, இரு தரப்பிற்கும் சமரசம் ஏற்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சகர்கள் பதிலளித்தனர்.

### கலைஞர் கைவினைத் திட்டம் தொடக்க விழா!

# குன்றத்தூருக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### பகுதிச் செயலாளர் என். சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை,ஏப்.19-

12-வது மண்டலக்குழுத் தலைவர் - ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என். சந்திரன் எம்.சி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:.

வருகிற 19.4.2025 (சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் தமிழக அரசின் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கொண்டுவந்துள்ள கலைஞர் கைவினைத் திட்டத்தை குன்றத்தூர் சேக்கிழார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் தொடங்கி வைக்க வருகைத் தந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்த மாபெரும் நிகழ்ச்சிக்கு வருகைத் தரும் நம் அன்புத் தலைவர் அவர்களுக்கு வழியெங்கும் சிறப்பான வரவேற்பு அளிக்க உள்ளதால் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டுமொத்த கழக நிர்வாகிகளும், ஆலந்தூர் தெற்குப் பகுதிக் கழக தோழர்களும் திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மண்டலக்குழுத் தலைவர் - பகுதிச் செயலாளர் என்.சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### க.கோவிந்தராஜ் – மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி – சி.பி.திருமலை முன்னிலை!

# அண்ணாநகர் 101 வது வட்டக் கழக முன்னோடி பொன்.கண்ணபிரான் படத்திறப்பு!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - கலாநிதி வீராசாமி - ச.பரமசிவம் - ந.இராமலிங்கம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, ஏப். 19

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டம், கழக முன்னோடியும், முன்னாள் அமைச்சர் ஆற்காடு நா.வீராசாமி அவர்களின் வாகன ஓட்டுநர் பொன். கண்ணபிரானின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (19.04.2025 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், எண். 391/2, கிரீன் கார்டன், எல்.பிளாக், 26 வது தெரு , அண்ணாநகர் கிழக்கில் நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, 100 வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.ஏகாம்பரம், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் கு. பாபு மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ 2 - நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58, சூளை, அவதான பாப்பையா சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா பூங்காவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் ஆய்வு மேற்கொண்டு, அப்பூங்காவில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு பணிகள் குறித்து மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு திருத்தணி நகராட்சி அருகிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய திருவுரு சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆலோசனை படி நகர ஆதிதிராவிட அணி செயலாளர் கே.சந்திரன், ஏற்பாட்டில் நகரச் செயலாளர் வி. வினோத்குமார், தலைமையில் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதி மொழி ஏற்று பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ஜி.எஸ்.கணேசன், கே.எஸ். அசோக்குமார், ரேவதி சுரேஷ், கே.முருகேசன், எம்.அமாவாசை, ஜி.ராஜசேகர், கே.சேட்டு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.

### வட்டச் செயலாளர் டி.கமல் மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர் தலைமையில்

# தியாகராயர் நகர் 130 வது வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ - கே.ஏழுமலை எம்.சி. திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப். 19

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டத்தில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் தலைமையில் அழகிரி நகர் பிரதான சாலையிலும், 130 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கர் தலைமையில் கங்கை அம்மன் கோயில் தெருவிலும், தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (19.4.2025 சனிக்கிழமை) காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது.

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைக்கின்றனர்.

நிகழ்ச்சியில் எம்.பழனிகிராமணியார், என்.ராமகிருஷ்ணன், வி.மணி, பில்டர் கே.சரவணன், தமிழ் எம். பழனி, ஜி.ஜி.சேகர், க.ஆனந்தன், ஏ.கே.காசிம், என்.சுந்தரம், எஸ்.சரவணன், கே. பாபுஜி, கண்ணன், எஸ்.விஜயலட்சுமி, வி.குமார், ஆர். வி.ரத்தினசாமி, ஜி.தண்டபாணி, ஆர்.சதாசிவம், ஆர். விஜயராமகிருஷ்ணன், எல். கணேஷ், டி.ஜி.சீனிவாசன், சி.சுந்தர், எம்.சுரேஷ், இ.ஜெயக்குமார், குழந்தை வேலு, டி.ரவி, பி.ஸ்ரீதர், எம். கிருஷ்ணன், சி.மகேஷ், சி.எஸ்.அசோகன், டெய்லர் எஸ்.கோபி, பி.அசோக், சிவக்குமார், சி.ஹரி வேலவன், தில்லை சி.பாஸ்கர், அருள் சேகர், செந்தில்குமார், பாலாஜி, ஜெ.பழனி, ஆர்.மணி, ஜெயச்சந்திரன், ஆர். நித்தியானந்தன், சுரேஷ், லோகு, டி.சித்ரா தேவி, எஸ்.சித்ரா தேவி, இ.ஜெனித்தா, என்.விஜயலட்சுமி, கே.கோபி, வி. மகேஷ், ஆர்.கணேஷ், கே.ஆர்.பாபு, முருகேசன் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புமாறு வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரவாயல் வார்டு–149–ல் உள்ள ஆழ்வார்திருநகரில் 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சி காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., எஸ்.அருணாசலம், இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி., பி.எம்..செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், த.ரமேஷ், எஸ்.ரமேஷ்ராஜ், சி.சுந்தர், அ.மோசஸ், ஆ.செல்வம் எஸ்.ஜி.மாதவன், செல்வி ரமேஷ், ஹேமலதா கணபதி, ச.சங்கர்கணேஷ், எஸ்.பாரதி, சாந்தி இராமலிங்கம், கே.ராஜி, ரமணிமாதவன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி ஏற்பாட்டில், அசோக்நகர் 11வது அவென்யூவில், மக்கள் தாகம் தீர்க்க அமைக்கப்பட்டுள்ள நீர்மோர் பந்தலை தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி திறந்து வைத்து, பொது மக்களுக்கு நீர்மோர் வழங்கினார். இந்நிகழ்வில், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், வட்ட கழக செயலாளர்கள் லலிதாபுரம் என்.துரை, மு.ம.செந்தில்குமார், ஜி.பி.செந்தில்குமரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுசலீம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.